RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s203

OPEN ACCESS

# நெருப்பாற்றில் நீந்தி வந்தேன் சுயசரிதையில் திருநங்கைகளின் வாழ்வியல் போராட்டங்கள்

**இரா. கார்த்திகா [அ, *], மு. அருணாசலம் [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-620023, தமிழ்நாடு, இந்தியா

# The life struggles of transgenders in the Nerupatril Neenthi Vandhen

**R. Karthika [a, *], M. Arunachalam [a]**

[a] Department of Tamil, Thanthai Periyar Government Arts & Science College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620023, Tamil Nadu, India

* Corresponding Author: karthikajayapal@gmail.com

Received: 12-06-2022
Revised: 30-09-2022
Accepted: 10-10-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

Society looks down upon the birth of transgenders due to genetic mutations. In her autobiography, Padmini says that transgenders should be aware of the mental barriers, dilemmas and physical problems within themselves, create clear good thinking and live with self-confidence. It should be clear that there is transgender just as the human race is male and female. Padmini Prakash's autobiography Nerupatril Neenthi Vandhen (I Swam in the Fire) tells us that we need to respect the spirit of transgenders who are born as one of us and want to live with us. The struggles of transgenders in the society and their names, their inhibitions in society now, the changes made by the social reform thinkers are recorded. Padmini proudly records the achievements of transgenders, social service, work session, making a mark for themselves and gaining their identity in life.

**Keywords:** Transgender, Padmini Prakash, Nerupatril Neenthi Vandhen, Physical Problems, Struggles, Society

## முன்னுரை

திருநங்கைகள் பிறப்பு மரபணு மாற்றத்தால் நிகழ்வதாகும். பொன். குமார் 'சமூகத்தில் ஆண், பெண் என்று இருபாலினங்கள் மட்டும் இல்லை. இரண்டுக்கும் இடையினமாக 'அரவாணி' என்னும் பாலினமும் உண்டு என்கிறார் (Kumar, 2021).

மரபணு மாற்றத்தால் திருநங்கைகள் பிறப்பினைச் சமூகம் இழிவாகப் பார்க்கின்றது. குரோமோசோம் ரசவாதத்தால் பெண் உணர்வுடன் ஆணாகத் திருநங்கைகள் பிறக்கின்றனர். அவ்வகையில் ஒரு திருநங்கையின் அதிர்ச்சி தரும் உண்மை வரலாறு பத்மினி பிரகாஷின் 'நெருப்பாற்றில் நீந்தி வந்தேன்' என்ற சுயசரிதை நூலாகும். எல்லா விதைகளிலும் ஏதோ ஒரு விருட்சம் மறைந்திருக்கிறது என்று சொல்லும் வகையில் திருநங்கைகளும் மானுடப் பிறப்பாகத் திகழ்கின்றனர். திருநங்கைகள் சமூகத்தில் மதிப்பின்றி இருப்பதை மு. அருணாசலம் கீழ்வருமாறு தெரிவிக்கின்றார். "இன்றைய சமுதாயத்தில் அவர்களை வேண்டடத்தகாத பிறவிகளைப் போல நினைத்து வெறுத்து ஒதுக்குகிறோம். அவர்களுக்கும் உயிர், உணர்வுகள் இருக்கின்றன." என்கிறார் (Arunachalam, 2011). புகழ் பெற்றவர்களும், சாதனையாளர்களும் தன்னுடைய வரலாறு படைத்திடத் தலைப்படுவர். திருநங்கை என்ற முறையில் பத்மினி தன் குறைகளைக் களைந்து வாழ்வில் சாதித்துள்ளார். சமூக

வாழ்வில் எதிர்கொண்ட போராட்டங்களை பத்மினி சுயசரிதையாகத் தந்து திருநங்கை வாழ்வியலுக்கு புதிய ஒளி ஏற்றியுள்ளார். பத்மினி தன்னுடைய பிறப்பினைக் குரோமோசோம் ஏற்படுத்தும் புதிர்தன்மை என்கிறார்.

“தாயின் கருவறையில் உருவாகும் சிசு ஆண் அல்லது பெண் என்பதை தீர்மானிப்பது குரோமோசோம்கள்தான். பொதுவாக ஆணாகப் பிறந்தாலும் சரி, பெண்ணாகப் பிறந்தாலும் சரி அவர்கள் உடலில் (23+23) = 46 என்ற ஜோடி குரோமோசோம்கள் இருக்கும். இதில் 47 குரோமோசோம்களைக் கொண்டு பிறந்தால் அதுதான் திருநங்கை. (XXY = திருநங்கை) இயற்கையாகவே ஒரு குரோமோசோம் அதிகமாக சேரும்போது திருநங்கையாகப் பிறக்கிறார்கள். கரு உருவாகும்போதே அது குரோமோசோம்கள் மாற்றத்தின்படி பெண், ஆண், திருநங்கை என்று மாற்றம் கொள்கிறது (Padmini Prakash, 2019). இவ்வாறு திருநங்கை பிறப்பு விளக்கப்படுகின்றது. ‘காகித மலர்கள்’ என்னும் கவிதையில் கடவுளின் கையெழுத்தில் சந்ததிப்பிழைப் போன்று இருப்பதாகக் கூறுவதுடன் பத்மினியின் கூற்று ஒப்பிடத்தக்கது.

“சந்திப்பிழைப் போன்ற

சந்ததிப்பிழை நாங்கள்”

என்று திருநங்கைகள் காகித மலர்களாகத் திகழ்வதாகச் சித்திரிக்கின்றார் (Kamarasan, 1995).

## திருமூலர் தரும் விளக்கம்

திருமூலர் ‘கரு உருவாதல்’ குறித்து 41 பாடல்கள் பாடியுள்ளார் (Thirumoolar, 2014).

ஆண் குழந்தை பிறந்திட, பெண் குழந்தை உருவாகிட திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள், இரட்டைக் குழந்தைகள் பிறக்கக் காரணம் என்னவென்று விரிவாகப் பாடியுள்ளார் (Thirumoolar, 2014).

மகப்பேறு மருத்துவரான ஜெயம் கண்ணன், திருமந்திரத்தில் ‘கரு உற்பத்தி’ என்ற தலைப்பில் திருமூலர் பாடியுள்ள பாடல்களை ஆராய்ந்து “திருமந்திரத்தில் மருத்துவம்” என்றொரு புத்தகம் வெளியிட்டுள்ளார் (Thirumoolar, 2014).

‘கரு உருவாகுதல்’ பகுதியின் முதல் பாடல் கீழ்வருமாறு அமைகின்றது.

“ஆக்குகின்றான் முன்பிரிந்த இருபத்தஞ்சு

ஆக்குகின்றான் அவன் ஆதிரம் ஆருயிர்

ஆக்குகின்றான் கர்ப்பக் கோளகை உள்ளிருந்து

ஆக்குகின்றான் அவன் ஆவதே அறிந்தே”

பொருள்: சிவபெருமான் அனைத்தையும் ஆக்குகின்றான். ஒரு உடலில் பொறிகள் ஐந்து, புலன்கள் ஐந்து, பெரும் பூதங்கள் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஆன்மா, ஐந்து என இருபத்தைந்து தத்துவங்களைச் சேர்த்து தாயின் கருப்பைக்குள் இருக்கும் உயிரோடு பொருந்தச் செய்கிறான். தான் உருவாக்கிய உயிர்களுக்குத் தேவையான அனைத்தையும் ஆக்குகின்றான். உயிர்களை உருவாக்கி அந்த உயிர்களுக்கு வேண்டியவற்றையும் உருவாக்கி அருள்கின்றான் (Thirumoolar, 2014).

திருமூலர் அனைத்து உயிர்களையும், சிவபெருமானே உருவாக்குகிறான் என்கிறார்.

“குழவியும் ஆனாய் வலத்தது ஆகில்

குழவியும் பெண்ணாம் இடத்து ஆகில்

குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்

குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே”

பொருள்: ஆண், பெண் உறவின்போது, ஆணின் மூச்சுக்காற்று வலது பக்க மூக்கு வழியாக (சூரிய கலை) வெளிப்பட்டால் பிறக்கும் குழந்தை ஆணாகும். மூச்சுக்காற்று இடப்பக்கம் (சந்திர கலை) வெளிப்பட்டால் பெண் குழந்தை பிறக்கும். பிராண வாயுவை அபான வாயு எதிர்த்து வந்தால் ஆணின் உயிரணு சிதறி இரட்டைக் குழந்தை பிறக்கும். இடப்பக்க மூச்சுக்காற்றும், வலப்பக்க மூச்சுக்காற்றும் சமமாக இருந்தால் குழந்தை திருநங்கையாகப் பிறக்கும் (Thirumoolar, 2014).

வலது பக்க மூக்கு வழியாகக் காற்று வெளியேறினால் ஆண் குழந்தை பிறக்கும். இடது பக்க மூக்கு வழியாகக் காற்று வெளியேறினால் பெண் குழந்தை பிறக்கும் என்பதை திருமூலர் சொல்லிவிட்டார். என்ன குழந்தை வேண்டும் என்பதை நாம் முடிவு செய்யலாம்... ஆனால், என்ன குழந்தை வேண்டும் என்ற தேவையை வைத்து, காற்றை, எப்படி வலது மூக்கிலோ, இடது மூக்கிலோ வெளியிடச் செய்ய முடியும்.?

தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வலது பக்கமாக ஒருக்களித்துப்படுத்தால், வலப்பக்க மூக்கு வழியாக மூச்சுக்காற்று வெளியேறும் (ஆண் குழந்தை பிறக்க) அதேபோல் இடது பக்கம் ஒருக்களித்துப்படுத்தால் இடது மூக்கு வழியாக மூச்சுக்காற்று வெளியேறும்.

திருமூலர் திருமந்திரத்தில் குழந்தைப் பிறப்பு பற்றியும் சிறந்த ஆரோக்கியமான குழந்தைகள் பிறப்பதற்கான வழிகளையும் கூறுகிறார் (Thirumoolar, 2014).

ஆண் குழந்தைகளிடம் பெண்மை மிகும்போது, "திருநங்கை" ஆகவும் பெண் குழந்தைகளிடம் ஆண்மை மிகும்போது "திருநம்பி" ஆகவும் இந்தக் குழந்தைகள் மாறுகிறார்கள். எனினும், ஒரு குழந்தை மாற்று பாலினத்தவர் ஆவது ஏன் என்று இதுவரை அறுதியிட்டு யாராலும் கூற முடிவதில்லை. உடலிலும் மனதிலும் குழப்பத்துடன் வளரும் இந்தக் குழந்தைக்குச் சரியான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டால் மாற்றம் நிகழக்கூடும். ஆனால், இது தொடர்பான விழிப்புணர்வு இல்லாததால் புறக்கணிப்பே இறுதியாகத் திகழ்கிறது என்று மகளிர் மணியில் ஒட்னா சுரையா பதிவு செய்கிறார் (Thirumoolar, 2014).

## வரலாற்றில் திருநங்கைகள்

சமூகத்தில் ஆண், பெண் பிறப்பு இயற்கை நெறிப்படி அமைகின்றது. இதுபோன்றே திருநங்கைகள் பிறப்பும் அமைகின்றது. ஆனால், காலம் காலமாகக் கோஷா, ஒன்பது, அலி, உஸ்ஸீ, பொட்ட என்று அருவருக்கத்தக்க இழிவான பெயர்களால் அழைக்கப்பட்ட அரவாணிகள் சமூகத்தை, இந்த மண்ணின் பெயராய் திருநங்கை என்று சமூக சீர்திருத்தச் சிந்தனையாளர்கள் அழைப்பது தற்போது நிகழ்ந்துள்ள மாற்றமாகும். பத்மினி இதுகுறித்து கீழ்வருமாறு சுட்டுகின்றார்.

"திருநங்கைகளுக்கு வரலாற்றில் இடம் இருந்திருக்கிறது. கி.மு. இருப்பத்திரண்டாம் வருடங்களிலேயே சுமேரிய நாகரிகத்தில் திருநங்கைகள் பொது மற்றும் வீட்டு விழாக்களில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். சீனாவில் மிங் வம்ச அரசு முடிவுக்கு வந்தபோது இம்பீரியல் அரண்மனையில் சுமார் 70,000 திருநங்கைகள் பணியில் இருந்தனர். சீனாவின் புகழ்பெற்ற கப்பற்படை தளபதி ஒரு திருநங்கையாகும் என்று வரலாற்றில் அவர்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார் (Padmini Prakash, 2019)."

கிறித்துவ மதத்தில் திருநங்கையர்களைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. "தாயின் வயிற்றிலிருந்து அன்னகர்களாய் பிறந்தவர்களும் உண்டு. மனிதர்களால் அன்னகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு. பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அன்னகர்களாக ஆக்கிக் கொண்டவர்களும் உண்டு." என்று திருநங்கையரை விவிலியம் 'அன்னகர்' எனப் பெயர் சூட்டி அவர்களுக்கு இறை ஆசிர்வாதம் உண்டு என்கின்றது (Arunachalam, 2016).

திருநங்கைகள் சமூகத்தின் இருளில் தள்ளப்பட்டாலும் இன்று ஃபீனிக்ஸ் பறவைபோல மீண்டெழுந்து நீதித்துறை, காவல் துறை, மருத்துவத்துறை, கல்வித்துறை என்று பல்வேறு துறைகளில்

முத்திரைத் தடம் பதித்து வருகின்றனர். திருநங்கையின் வாழ்வு வரலாற்றுத் தடத்தில் நிகழ்ந்த புதிய மாற்றமாகும்.

## திருநங்கைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

திருநங்கைகள் சமூகத்தில் பல்வேறு இன்னல்களைச் சந்திக்கின்றனர். “ஆம்பளயா பொறந்திருந்தா? அஞ்சாறு பிள்ளைகள் பெத்து அரசாண்டிருப்போம் பொம்பளயா பொறந்திருந்தா? புருஷனுக்குப் புள்ள குட்டிகள பெத்து பூவா பூத்து நிப்போம் இப்படி இரண்டும் இல்லாததனாலதான் தெருவுல நிக்கிறோம். அதனால்தான் அழகா இருக்கறவங்க தெருவுல (தந்தா) பாலியல் தொழிலுக்கு நிக்கறதும், அசிங்கமா, அகடம் பகடமா இருந்தா பிச்சையெடுக்கறதும் எங்க பொழப்புக்கான வழியா போச்சு, ஆம் நல்ல குழந்தைக்கு சொந்தம் கொண்டாட பலர் வருவார்கள். கலைத் துறையினருக்கு உண்மை தெரியும். எங்கள் வாழ்வில் நன்றி மறந்தவர்கள் அதிகம் என்று அத்தகைய நிலையில் எங்கள் வாழ்க்கை பயணம் தொடர்கிறது” இன்று பிச்சையெடுத்தலும், பாலியல் தொழிலும் விதியாக விதிக்கப்பட்டதால் வீதி, வீதியாக சென்று பிச்சையெடுத்து பிழைப்பதாக வேதனையுடன் தெரிவிக்கிறார். குடும்ப அமைப்புகளில் பாசமும் உறவும் கைவிட்ட முடிவைப் பின்வருமாறு படம்பிடித்துக் காட்டுகிறார் (Padmini Prakash, 2019).

“இவ்வாழ்க்கையில் எதையெல்லாம் இழக்கக் கூடாதோ? அதையெல்லாம் இழந்து வருகிறேன். பால்ய வயதில் தாயன்பு என்னவென்று அன்பை உணரலாம் என்ற தருணத்தில் அதையும் இழந்தேன், காதல் பருவத்தில் காதலை இழந்தேன், நல்ல நட்பில் நட்பை இழந்தேன், உண்ணும் உணவை இழந்தேன், பந்தப் பாசங்களை இழந்தேன். இப்படிப் பெற்றவைகளைவிட இழந்தவைகளே அதிகம். இப்படி பிறந்துவிட்ட எங்களை தீண்டத்தகாதவர்களாக, கேலிக்குரியவர்களாக சித்திரித்து, ஒதுக்குவது நியாயமில்லையே என்று தன் ஆற்றாமையை ஆதங்கத்துடன் வெளிப்படுத்துகிறார் (Padmini Prakash, 2019).

பத்மினி குடும்ப நிலைகளில் திருநங்கைப் பிறப்பு இழிவாகவும், மோசமாகவும் பார்க்கப்பட்டு வருவதை தன் சுயசரிதையில் தெளிவுறுத்துகின்றார்

## வாழ்வியல் திருப்பங்கள்

பத்மினி நெருப்பாற்றில் நீந்தி சமூக வாழ்வியலில் போராட்டங்களை எதிர்கொண்டவர். தன்னுடைய வாழ்க்கையைச் சிறப்பாக மாற்றி உலகத்தில் தனக்கென தனியிடத்தை முத்திரையாகப் பதித்துள்ளார். இது குறித்து அவரே தெரிவிக்கிறார்.

பத்மினி திருநங்கைகளால் நடத்தப்படும் “தாய் விழுதுகள்” அறக்கட்டளையின் செயலாளராகப் பொறுப்பு வகிக்கின்றார். சமூக நலம் கருதி சமூகப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். “மிஸ் இந்தியா” பட்டத்தை 2019இல் வென்றார். இப்படி “பீக் ஹவர்ஸ்” என்று சொல்லும் அளவிற்கு ஒரே சமயத்தில் நாட்டிய நர்த்தகியாக, செயலாளராக, அட்வகஸி ட்ரெயினராக, நடிகையாக, திருநங்கைகளின் ஆலோசகராகப் பல பரிமாணங்களில் தன்னை வெளிப்படுத்திக்கொண்டுள்ளார். கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சம்மேளனத்தில் அப்போதைய முதல்வர் சித்தராமையா அவர்கள் தலைமையில் பெற்ற விருதும் வாழ்க்கையில் மறக்க முடியாதது என்று சுயசரிதையில் பதிவு செய்துள்ளார். மேலும், செய்தி வாசிப்பாளராக வாய்ப்பு வீடு தேடி வருகின்றது. அதனை ஏற்றுக் கொண்டு பணியாற்றுகின்றார். இதனை, “உலகின் முதல் திருநங்கை செய்தி வாசிப்பாளர்” என்ற சிம்மாசனத்தில் உட்கார்ந்து உலகை வலம் வருகிறேன். “Indian Today” பத்திரிகை இந்தியா பெருமைப்பட வேண்டிய முகங்களில் ஒன்று என்று என் புகைப்படத்தை வெளியிட்டு பெருமைப்படுத்தியது என்கிறார் (Padmini Prakash, 2019).

திருநங்கைகளின் வலியினைப் போக்கிடும் வகையில் பத்மினி வாழ்வு அமைகிறது. இதற்கு பலர் நடத்திய போராட்டங்களும், சந்தித்த சிக்கல்களும் முட்பாதையாக விரிந்தது. அதனை

மலர்பாதையாக அமைத்துக் கொண்ட போராட்டக் குணம் உடையவராகத் திகழ்கின்றார். கவிஞர் பவ. கணேஷ், திருநங்கை 'மூன்றாம் பால்' கவிதையில் படைத்துள்ள கவிதை பத்மினிக்குப் பொருந்தும்.

"படைப்பில் குறைபாடு

உழைப்பில் திறமை வெளிப்பாடு

மிளிரும் திருநங்கைகள்"

என்று இல்லம் விரட்டினாலும், சமூகம் துரத்தினாலும் சட்டம் பாதுகாக்கவில்லை என்றாலும் உழைப்பால், திறமையால், கல்வியறிவால் திருநங்கைகள் முன்னேறி வருவது பதிவு செய்யத்தக்கதாகும். பத்மினி சக மனுஷியாக தங்களை மதிப்புடன் நடத்திட வேண்டுகோள் விடுக்கின்றார் (Kumar, 2021).

சாதாரணமாக தெருவில் அடிபட்டு கிடக்கும் நாய்க்குட்டியை வீட்டுக்குத் தூக்கி வந்தால்கூட அதற்கு டைகர், ஜீசர், ஜூலி, ஜிம்மி எனச் செல்லமாக பெயர் சூட்டி மகிழும் இந்தச் சமூகம் இயற்கையின் திருவிளையாடலில் சந்திப்பிழைகளாய் பிறந்துவிட்ட எங்களை எண்ணின் பெயரால் அழைப்பது எப்படி ரணப்படுத்துகிறது" என்று சமூகத்தில் அங்கீகாரம் இல்லாத ஆற்றாமையை ஆதங்கத்துடன் வெளிப்படுத்துகிறார் (Padmini Prakash, 2019).

## திருநங்கைகளின் உறவுமுறை

திருநங்கைகள் ஒரு குழுவாக 'ஜமாத்' என்னும் பெயரில் குடும்பமாக வாழ்கின்றனர். "ஆணாதிக்கம் நிறைந்த இச்சமூகத்தில் ஆணே முதலிடம் என்றால் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாய் என்பதில் சமரசம், சமத்துவம் என்கிற விடயம் அடிபடுகிறது. அதற்குப் பதிலாகத் திருநங்கைகளை மாற்று பாலினத்தவர் என்று குறிப்பிடுவதே சரி" என்ற தன் கருத்தை அழுத்தமாக பத்மினி பதிவு செய்கிறார் (Padmini Prakash, 2019). திருநங்கைகள் தாய்வழிச் சமூக உறவு முறையினைக் கடைபிடிப்பதால் அது குறித்த சொற்கள் அவர்கள் சமூகத்தில் இடம்பெறுகின்றன.

"தாதகுரு - தாதி - பாட்டியின் தாய் (கொள்ளுப்பாட்டி)

நானகுரு - நானி - பாட்டி

குருகோசா - குரு - அம்மா

படாகுரு - பெரியம்மா

காலாகுரு - சின்னம்மா

குருபாய் - அக்கா - தங்கைகள்

சேலா - மகள்

நாத்தி சேலா - பேத்தி

சந்தி சேலா - கொள்ளுப் பேத்தி

சடக்கி சேலா - எள்ளுப் பேத்தி"

இப்படித் திருநங்கைகள் இன்றளவும் தாய்வழிச் சமூக அமைப்பை பின்பற்றுகின்றனர். ஆண் தன்மையை வெறுத்திடும் காரணத்தாலும், போத்தி மாதா வழித்தோன்றல்கள் என்பதாலும் பெண் வழி உறவுச் சொற்களையே தங்கள் உறவுகளில் கையாள்கின்றனர். திருநங்கை கல்கியின் கவிதை இதனை உணர்த்தும்

"குறி அறுத்து

குருதியில் நனைந்து

மரணம் கடந்து

மங்கையானேன்"

என்று திருநங்கையின் பெண் நிலை பேசுகின்றார் (Kalki, 2014).

தனக்கான உறவுமுறைகள் மட்டுமின்றி அதற்கான மொழிச் சொற்களையும் திருநங்கையினர் படைத்திருக்கின்றனர். இவர்களது மொழி 'கவுடி பாஷை' (மறைமொழி) என்று மற்றோர் அறிய முடியாத 'குழூவுக் குறியீடாக' அச்சமூகத்தில் இடம்பெற்று வருகின்றது.

## முடிவுரை

பத்மினி தனது சுயசரிதையில் திருநங்கைகள் தங்களுக்குள் இருக்கும் மனத்தடைகளையும், குழப்பங்களையும், உடல் ரீதியாக ஏற்படும் பிரச்சினைகளையும் குறித்து விழிப்புணர்வு பெற்று தெளிவான நல்ல சிந்தனையை உருவாக்கித் தன்னம்பிக்கையுடன் வாழவேண்டும் என்கிறார். மனித இனம் ஆண், பெண் என்று இருப்பதுபோல் திருநங்கையும் உண்டு என தெளிதல் வேண்டும். நம்மில் ஒருவராகப் பிறந்து நம்மோடு சேர்ந்து வாழத்துடிக்கும் திருநங்கைகளின் உணர்வை மதிக்க வேண்டும் என்பதே பத்மினி பிரகாஷின் 'நெருப்பாற்றில் நீந்தி வந்தேன்' என்ற சுயசரிதை நமக்குத் தெரிவிப்பதாகும். உண்மை வரலாறு என்ற முறையில் இச்சுயசரிதை நூல் அமைகிறது. சமூகத்தில் திருநங்கைகளின் போராட்டங்கள் மற்றும் அவர்களுக்கான பெயர்கள், தற்போது சமூகத்தில் அவர்களின் தடுப்புகள், சமூகச் சீர்திருத்த சிந்தனையாளர்கள் செய்த மாற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பத்மினி திருநங்கைகளின் சாதனைகள், சமூக சேவை, பணி அமர்வு, தனக்கென ஓர் தனி முத்திரையைப் பதித்திருப்பது, வாழ்வில் தங்களுக்கான அடையாளத்தைப் பெறுவதையும் பெருமையுடன் இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

## References

Arunachalam, M. (2011) Tamil Ilakkiyangalil Aravanikal, Arun Pathippagam, Chennai, India.

Arunachalam, M. (2016) Aravanikal sangakalam muthal naveena kalam varai, Arun Pathippagam, Chennai, India.

Kalki, (2014) Kuri Aruththen, Vikadan Prasuram, Chennai, India.

Kamarasan, N. (1955) Karuppu Malarkal, Thirumagal Nilaiyam, Chennai, India.

Kumar, P. (2021) Santhi Pilai, Nalam Pathippagam, Chennai, India.

Maharajan, (2007) Aravaanikal (Udaliyal, Ulaviyal, Valviyal,), Tholamai Veeliyeedu, Chennai, India.

Padmini Prakash, (2019) Nerupparatril Nendhi Vanthen, Sivaguru Pathippagam, Chennai, India.

Thirumoolar, (2014) Thirumanthiram, Palaniappa Brothers, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License